**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.104/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : வேலு | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகளின் அடையாளம் குறித்து 10.02.2026ம் தேதியிட்ட BNSS 355 ன் உத்தரவு படி ஆட்சேபனையில்லை என்று மேற்குறிப்பு செய்துள்ளார்.)

**(10.02.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது புலியூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். 1992ம் வருடம் நான் சாத்தங்குடி கிராமத்தை சார்ந்த காட்டை கிரையமாக வாங்கினேன். பொன்னுசாமி என்பவர் மகன் நேரு, பிச்சை, கார்த்திகை சாமி, ஆகியோருக்கு சொந்தமான இடத்தை தான் நான் கிரையமாக பெற்றேன். பொன்னுசாமியின் 2வது மனைவியின் மகன் என்று கூறி சுந்தரமூர்த்தி என்பவர் 2017ம் வருடம் எனக்கு பங்கு உள்ளது என்று நான் வாங்கிய காட்டில் உழுவதற்காக வந்தார். காட்டில் நான் இல்லாத சமயத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்து உழுதுவிட்டார். நான் சம்பவம் தொடர்பாக திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவ தினத்தின் போது சுந்தரமூர்த்தியும் அவருடன் அவரது 2 மகன்களும் வந்தனர். அனைவரும் சேர்ந்து தான் எனது காட்டில்

அத்துமீறி உள்ளே நுழைந்து உழுதுவிட்டார்கள். அவர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.104/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **விஜயராணி** | Caste | : |
| Father 's Name | : **வேலு** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகளின் அடையாளம் குறித்து 10.02.2026ம் தேதியிட்ட BNSS 355 ன் உத்தரவு படி ஆட்சேபனையில்லை என்று மேற்குறிப்பு செய்துள்ளார்.)
**(10.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது புலியூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு பொன்னுசாமி என்பவரிடம் சாத்தங்குடி கிராமத்தில் காடு வாங்கினோம். அதில் பருத்தி, மொச்சை, ஆகிய பயிர்களை பயிரிட்டு இருந்தோம். காட்டிற்கு எல்லை கற்களை ஊண்டி இருந்தோம். சுமார் 10 வருடங்கள் இருக்கும். தேதி சரியாக ஞாபகம் இல்லை. மதியம் 2 மணியிருக்கும். நான் மேற்படி காட்டில் பருத்தி எடுத்துக் கொண்டிருந்த போது சுந்தரமூர்த்தி என்பவரும் அவரது மகன்களும் மேலும் 4 நபர்களும் சேர்ந்து எங்கள் காட்டில் அத்துமீறி உள்ளே நுழைந்து எல்லை கற்களை பிடுங்கி எறிந்துவிட்டு பிச்சைமணி டிராக்டரை கொண்டு காட்டில் பயிருடன் உழுதுவிட்டார்கள். எதற்காக இப்படி உழுகிறீர்கள் என்று அவர்களிடம் கேட்ட போது எனக்கும் காட்டில் பங்கு உண்டு என்றும் எங்களை மிரட்டினார்கள். அவர்கள் மிரட்டியதால் அப்படியே நான் வீட்டிற்கு

சென்று எனது கணவரிடம் சொன்னேன். பின்பு எனது கணவர் வேலு காவல் நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக புகார் அளித்தார். சம்பவ தினத்தின் போது எதிரிகளான சுந்தரமூர்த்தி மற்றும் அவரது மகன்கள் அனைவரையும் பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.104/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டி | Caste | : |
| Father 's Name | : **செல்லச்சாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகளின் அடையாளம் குறித்து 10.02.2026ம் தேதியிட்ட BNSS 355 ன் உத்தரவு படி ஆட்சேபனையில்லை என்று மேற்குறிப்பு செய்துள்ளார்.)
**(10.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது புலியூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆடுமேய்க்கும் தொழில் செய்து வருகிறேன். சுமார் 6, 7 வருடங்கள் இருக்கும். தேதி சரியாக ஞாபகம் இல்லை. மதியம் 2 மணி இருக்கும். நான் ஆடுமேய்த்துக்கொண்டு வந்து கொண்டிருந்த போது வேலுவின் காடு பயிரோடு உழுதப்பட்டு கிடந்தது. யார் உழுதார்கள் என்ன விபரம் என்று எனக்கு தெரியாது. எதிரி சுந்தரமூர்த்தியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 01.06.2017ம் தேதி காலை 11 மணிக்கு நான் வேலுத்தேவர் வகையறா காட்டு பக்கம் ஆடுகளை மேய்த்துக் கொண்டு இருந்தேன் என்றும் அங்கு எங்கள் வேலு என்பவர் அவரது நிலத்திற்கு வரும் போது சாத்தங்குடி ஊரைச் சார்ந்த 3 நபர்கள்

அவரது நிலத்தில்  உள்ள கல்லை பிடுங்கிங் கொண்டு இருந்தார்கள் என்றும் அப்போது வேலு கேட்டதற்கு வேலுவை கொன்றுவிடுவேன் என்று எதிரிகள் மிரட்டினார்கள் என்றும் எதிரிகள் அனைவரும் சேர்ந்து டிராக்டரை வைத்து பயிர்களைசேதப்படுத்தினார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு தெரிந்த நபர்கள் என்பவதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை